கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 24/2025

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் 03 நாள் திங்கள் கிழமை இன்று இந்த வா.சா.3 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : கல்யாணி

கணவர் பெயர் : அருனாச்சலம்

வயது :

தொழில் :

---

முதல் விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.15 | எனது ஆதார் அடையாள அட்டை | அசலோடு ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. |

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. எனது கணவர் திருப்பூரை சேர்ந்தவர்தான். நானும் எனது கணவரும் திருமணத்திற்கு பிறகு கரட்டாங்காட்டில் இருந்தோம், அதன் பிறகு குமாரசாமி காலனியிக்கு வந்துவிட்டோம். அதன் பிறகு மீண்டும் கரட்டாங்காட்டிற்கே சென்றுவிட்டோம்.

கரட்டாங்காட்டில் எவ்வளவு வருடம் இருந்தோம் என்றால் 5, 6 வருடம் இந்தோம். நான் எவ்வளவு நாட்களாக கரட்டாங்காட்டில் இருந்தோம், எப்போது குமாரசாமி காலனிக்கு வந்தோம் என்பதை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை.

2. எனது கணவர் வீடு விலாசம் கரட்டாங்காட்டில் தான் இருந்துள்ளது என்றும், தற்போது வழக்கிற்காக அதனை மாற்றி ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது தம்பியின் திருமணத்தின்போது அவரது வயது என்ன இருக்கும் என்றால் தெரியாது. அவருக்கு திருமணம் நடந்தபோது எனது தம்பியின் குடும்ப அட்டை எங்கு இருந்தது என்றால் எனது அம்மா வீட்டுடன் இருந்தது. 2004, 2005 ல் எனது தம்பியின் குடும்ப அட்டை எங்கு இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது அம்மாவின் முகவரியில் குடும்ப அட்டை யார் பெயரில் இருந்தது என்றால் எனது பெற்றொர்கள் பெயர் ஆறுமுகம் ஜெயலச்சுமி மற்றும் அவரது குழந்தைகள் பெயர் இருந்தது. நான் பார்த்த குடும்ப அட்டை எந்த வருடத்திற்கு உரியது என்றால் தெரியாது. ஆரம்பமுதல் எனது அம்மாவீட்டு முகவரியில் தான் குடும்ப அட்டை இருந்தது. ஆறுமுகம் தேவியை 1997 ம் ஆண்டு திருமணம் செய்து 1998 ல் ஆண்டு அவர்களுக்கு லாவண்யா பிறந்துள்ளார் என்றால் தெரியாது. ஆறுமுகம் இறக்கும் வரை தேவி மற்றும் லாவண்யாவும் கருவம்பாளையத்தில் குடியிருந்தார் என்றால் தெரியாது.

4. ஆறுமுகம், தேவி, லாவண்யா பெயரில்தான் குடும்ப அட்டை வாங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது தம்பியை மருத்துவமனையில் யார் சேர்த்தார்கள் என்றால் அவரே மருத்துவமனைக்கு போன் செய்து சேர்ந்துகொண்டார். எனது தம்பி தேவியுடம் வாழ்ந்துவத்ததால்தான் அவரை தேவி மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. 108 ற்கு எனது தம்பியே போன் செய்து மருத்துவமனையில் சேர்ந்துகொண்டார். அங்கு இருந்து தேவிக்கு போன் செய்து வர சொல்லியுள்ளார்.

5. எனது தம்பி ஆறுமுகம் எனது அம்மாவீட்டில் இருந்து 108 ற்கு போன் சொய்து மருத்துவமனை சென்று இருந்தால் அந்த விபரம் எங்கள் அனைவருக்கும் தெரிந்து இருக்கும் என்றால் நான் கரட்டாங்காட்டில் உள்ளேன். ஆறுமுகம் போன் செய்து அவனே சென்றதாக அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள். எனது தம்பி 108 ற்கு போன் செய்து அவரே சென்றதாக எனது வீட்டை சேர்ந்த நபர்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னார்கள். நாங்கள் மருத்துவனைக்கு செல்வதற்கு முன்பு தேவி மருத்துவமனையில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் ஜெயலச்சுமி ஆகியோர்கள் மருத்துவமனைக்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், அந்த சமையத்தில் ஜெயலச்சுமி திருப்பூரில் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

6. எனது தம்பியின் இறப்பிற்கு பிறகு ஜெயலச்சுமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். போலீசார் விசாரித்து தேவி தான் ஆறுமுகத்தின் மனைவி என்று முடிவு செய்து அவரிடம் பிரேதத்தை ஒப்படைத்தார்கள் என்றால் நாங்கள் பேசிக்கொண்டு இருந்தபோது தேவி பிரேதத்தை எடுத்துசென்றுவிட்டார். தேவிதான் இறுதி காரியத்தை செய்தார்

என்றால் நாங்கள் தான் செய்தோம். போலீஸ் விசாரணையுடன் நாங்களும் சேர்ந்து முடிவு செய்து ஆறுமுகத்தின் சட்டப்படியான மனைவி தேவிதான் என்று தீர்மானித்ததன் அடிப்படையில் பிரேதத்தை தேவியிடம் ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல. ஆறுமுகம் வேறு பெண்களுடம் தொடர்பில் உள்ளதாக போலீசில் புகார் கொடுக்கவில்லை.

7. ஆறுமுகத்தின் சட்டப்படியான மனைவி தேவி என்றும், அவர்களுக்கு பிறந்த குழந்தை லாவண்யா என்றால் சரியல்ல. நாங்கள் அவர்களது வீட்டில் கண்டுபிடித்த சீட்டில் செந்தில் என்று எழுதியிருந்தது. அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. லாவண்யாவின் பிறப்பு சான்றிதழில் பெற்றோர் பெயர் ஆறுமுகம் தேவி என்றுதான் உள்ளது என்றால் சரியல்ல. லாவண்யாவின் பிறப்புச்சான்றிதழில் உள்ள பெயரை நீக்கச்சொல்லி மாநகராட்சியில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆறுமுகத்தின் சட்டப்படியான வாரிசு அவர்கள் தான் என்பதால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அறுமுகத்தின் அப்பா பெயரில் உள்ள சொத்திற்கு தேவி லாவண்யா வாரிசாக வருவார்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

(4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டார். )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.03 11:06:44 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.